அவளுடைய பொழுதுகள்
சூன்யமாகி போயின
தன் குறுகிய வாழ்வெல்லைக்குள்
யாரையும் அனுமதிப்பதில்லை
முதிர்ந்த தலையில்
வெள்ளை பேன்களின் தொந்தரவை
தவிர்க்க முடியவில்லை.

சில நாட்களாகவே புலப்படாத
சூரிய உதயமும் அஸ்தமனமும்
கைக்கு அகப்படுபவரிடம்
கேட்கும் நேரமும் காட்சிகளும்
செவிகளை பின் தொடர்ந்த
வண்ணமிருக்கும்.

அவள் இரகசியமாக
தொலைந்து போன பயணங்களை
எண்ணிக் கொண்டிருந்தாள்
படுக்கையிலிருந்தபடியே
கூரையற்ற வீட்டில்
நட்சத்திரங்களை எண்ணியபடி
கனவுகள் கண்டிருந்தாள்
யார் யாரோ பிதற்றுவதைக் கேட்டுத் கொண்டு
தன் வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டாள்.

சலனமற்ற நேரங்களில்
இருண்ட பள்ளத்தாக்கில் இருப்பதாக
உணர்கிறாள்
பயத்தால் வெளிறிய முகமும்
நீர் சுரக்கும் கண்களோடும் காட்சியளிக்கிறாள்

வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத
வெள்ளை இரவுகளை
அவள் நிரந்தரமாய் நகர்த்துகிறாள்.

தோழி